DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.367/2021**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ரதிலட்சுமி |
| Husband Name | : | முத்தையா |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026.
( 1, 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்.)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருமங்கலத்தில் குடியிருக்கிறேன். என்னுடைய கணவர் இறந்துவிட்டார். இவ்வழக்கில் இறந்துபோன அய்யனார் என்னுடைய மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் என்னுடைய கணவரின் உடன்பிறந்த தம்பிகள் ஆவார்கள். இன்றிலிருந்து கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு பெரிய கார்த்திகை அன்று ஆஜர் எதிரிகள் என் மகனை கல்லுப்பட்டி ஏரியாவில் உள்ள பட்டறை இருக்கும் இடத்தில் வைத்து அடித்துவிட்டதாக என்னிடம் வந்து சொன்னார். நான் என் மகன் சொன்னவுடன், பட்டறைக்கு சென்றேன். அங்கு இருந்த ஆஜர் எதிரிகளிடம் ஏன் மகனை அடித்தீர்கள் என்று கேட்டதற்கு அப்படித்தான் அடிப்போம் என்று சொன்னார்கள். உங்கள் அண்ணன் இறந்து ஒரு வருடம் தான் ஆகிறது அதற்குள் ஏன் நீங்கள் எங்களுடன் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அப்படித்தான் அடிப்போம் என்று சொன்னார்கள். பிறகு நீங்கள் தான் எங்கள் அண்ணனை கொன்றுவிட்டீர்கள் என்று சொல்லி என்னையும் தகாத வார்த்தைகளால் திட்டி மறுபடியும் என் மகனை எதிரிகள் கணேசன், செல்வம் மற்றும் குணசீலன் ஆகியோர்கள் கம்பால் முதுகு, இரண்டு கைகள்

ஆகிய இடங்களில் அடித்துவிட்டார்கள். சிறிது நேரம் கழித்து போலீஸ்காரர்கள் வந்தார்கள். அவர்கள் என் மகனை காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள். சிறிதுநேரம் கழித்து உன் மகன் மயக்கமடைந்துவிட்டார் என்று காவல்நிலையத்தில் இருந்து வெளியில் அழைத்து வந்தார்கள். என் மகனை கல்லுப்பட்டியிலுள்ள முத்துகிருஷ்ணன் தனியார் மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றோம். அங்கு என் மகன் இறந்து பத்து நிமிடம் ஆகிறது என்று சொன்னார்கள். பிரேத பரிசோதனை செய்தவற்காக செய்வதற்காக மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு என் மகனின் உடலை கொண்டு வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் கொடுத்தது தான் அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் போலீஸ் விசாரணையில் மேற்கூறிய சங்கதிகளை சொல்லிவிட்டு மேலும் என் கணவருடன் உடன்பிறந்தவர்கள் கணேசன், செல்வம், பாண்டி மற்றும் ராணி ஆகியோர்கள் ஆவார்கள் என்றும், என் கணவர் இறந்ததற்கு நானும், என் குடும்பத்தாரும் தான் காரணம் என்று அடிக்கடி எங்களோடு சண்டை போட்டு வந்தார்கள் என்றும், அவர்கள் எங்களுடன் அதனால் பேசமாட்டார்கள் என்றும், கடந்த 29.11.2020ம் தேதி மாலை 05.30 மணியளவில் நான், என் மருமகள் இந்துமதி ஆகியோர்கள் வீட்டில் இருந்த போது என் மகன் அய்யனார் வீட்டிற்கு வந்து இன்று காலை 10.30 மணியளவில் டி.கல்லுப்பட்டி வீரகாளியம்மன் கோவிலுக்கு தெற்கு பக்கம் உள்ள பட்டறைக்கு பின்புறம் உட்கார்ந்து தண்ணி அடித்து கொண்டிருந்ததாகவும், அந்த பாட்டிலில் இருந்த மீத மதுவை காணவில்லை என்று இறந்த எனது மகன் சப்தம் போட்டு

கொண்டிருந்ததாகவும், நாங்கள் தான் எடுத்துவிட்டோம் என்று சப்தம் போடுகிறாய என்று ஆஜர் எதிரிகள் கேட்டார்கள் என்று என் மகன் கூறினார் என்றும், அதற்கு என் மகனை அவர்களில் கணேசன் உருட்டு மூங்கில் கம்பை எடுத்து எனது மகனின் முதுகு, இடுப்பின் வலது பக்கம், இடுப்பிற்கு கீழே அடித்துவிட்டதாகவும், செல்வம் என் மகனின் கழுத்தை பிடித்து பின்னால் தள்ளிவிட்டார் என்றும், என் மகன் மட்ட மல்லாக்க கீழே விழுந்துவிடவும் குணசீலன் அவனை காலால் வயிற்றிலும் மார்பிலும் உதைத்தார் என்று என் மகன் கூறினார் என்றும், அப்போது அங்கு கல்லுப்பட்டியை சேர்ந்த கண்ணன் மற்றும் பிச்சை ஆகியோர் விலக்கிவிட்டார்கள் என்று என் மகன் கூறினார் என்றும், இது குறித்து நான் புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றேன் என்றும், என் கொழுந்தன் செல்வம் காவல்நிலையத்திற்கு வந்து அய்யனார் எங்களுடன் சண்டை போட்டார்கள் என்றும் அவர்களும் புகார் கொடுக்க வந்தார்கள் என்றும், இந்த தகவல் தெரிந்து என் மகன் நாகபாண்டி, அவரது மனைவி இந்துமதி, என் இளைய மகள் கிருஷ்ணவேணி ஆகியோர்கள் காவல்நிலையத்திற்கு வந்துவிட்டார்கள் என்றும், அப்போது சப் இன்ஸ்பெக்டர் என் மகன் அய்யனார் குடிபோதையில் இருந்ததால் காவல்நிலையத்தில் காத்திருக்க சொல்லிவிட்டு என்னிடம் விசாரித்து கொண்டிருந்தார் என்றும், என் மகன் அய்யனாருக்கு திடீரென்று உடல்நல குறைவு ஏற்பட்டவுடன் காவல்நிலையத்தில் இருந்த நானும், என் மகன் நாகபாண்டி, என் மருமகள் இந்துமதி, என் மகள் கிருஷ்ண வேணி ஆகியோர்கள் என் மகன் அய்யனாரை ஒரு ஆட்டோவில் ஏற்றி கல்லுப்பட்டி முத்துகிருஷ்ணன் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், அங்கு பரிசோதித்த மருத்துவர் என் மகன் அய்யனாருக்கு பல்ஸ் குறைந்து கொண்டே வருகிறது, வேகமாக மதுரை அரசு இராசாசி மருத்துவமனைக்கு கொண்டு செல்லுங்கள் என்று கூறினார் என்றும், கொஞ்ச நேரத்தில் என் மகன் அய்யனார் அதே மருத்துவமனையில் இறந்துவிட்டதாக மேற்படி மருத்துவர் சொல்லிவிட்டார்

என்றும், இந்நிலையில் முன்விரோதத்தை மனதில் வைத்து என் கொழுந்தனார்கள் கணேசன், செல்வம் மற்றும் நாத்தனார் மகன் குணசீலன் ஆகியோர்கள் சேர்ந்து எனது மகனை அடித்தே கொன்றுவிட்டார்கள் என்றும், என் மகன் அய்யனாரை மூங்கில் உருட்டு கட்டையால் அடித்த கணேசன், செல்வம் மற்றும் குணசீலன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நான் கொடுத்துள்ள புகாரில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் கொடுத்த மேற்படி புகாரில் வாக்குவாதம் செய்து என்னை அடித்தார்கள் என்று என் மகன் என்னிடம் சொன்னவுடன் நான் வீட்டில் இருடா என்று சொல்லிவிட்டு, நான் போலீஸ் ஸ்டேசனில் சென்று கண்டிக்க சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு நான் போலீஸ் ஸ்டேசன் வந்து போலீஸாரிடம் என் கொழுந்தன்மார்கள் என் மகனை அடிச்சிட்டாங்கலாம் என்று சொல்லிகிட்டு இருக்கும் போது என் கொழுந்தன் செல்வம் என்பவரும் போலீஸ் ஸ்டேசன் வந்து என் அண்ணன் மகன் அய்யனார் எங்களை அடிக்கிறான் என்று நடவடிக்கை எடுங்கள் என்று புகார் மனுவில் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்நிலையில் வீட்டில் இருக்க சொன்ன என் மகன் பட்டறைக்கு வந்துவிட்டான் என்று நினைத்து நான் பட்டறைக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் பட்டறைக்கு சென்ற போது என் மகன் அய்யனார் என் கொழுந்தன் கணேசனை கையால் கன்னத்தில் அடிக்கவும் அவர் கீழே விழுந்துவிட்டார் என்றும், நான் என் மகனை சண்டை போடக்கூடாது என்று விலக்கிவிட்ட போது ரோந்து போலீஸ் வாகனம் அங்கு வந்து சண்டையை விலக்கிவிட்டு காவல்நிலையத்திற்கு என் மகனை அழைத்துச்சென்றார்கள் என்று எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால்

சரிதான்.என் வீட்டிற்கும் சண்டை நடந்த இடத்திற்கும் என் மகன் இருசக்கர வாகனத்தை அவர் தான் ஓட்டிச்சென்றார். சண்டை நடந்த இடத்தில் இருந்து ரோந்து வாகனத்தில் வந்த போலீஸார் என் மகனை போலீஸார் நடத்தி தான் காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்கள். அப்பொது என் மகன் சாதாரணமாக நடந்து சென்றான். நானும் பின்னால் உடனடியாக காவல்நிலையம் சென்றுவிட்டேன். காவல்நிலையத்திற்கு என்னுடைய மற்ற இரு மகன்களும், இரு மருமகள்களும் காவல்நிலையம் வந்துவிட்டார்கள். நான், எனது இரு மகன்கள், இரு மருமகள்களும் மற்றும் உறவினர்களும் காவல்நிலையத்தின் வெளியில் தான் நின்று கொண்டிருந்தோம். காவல்நிலையத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அந்த நேரத்தில் எதிரிகள் யாரும் காவல்நிலையத்திற்கு வரவில்லை. அதன் பிறகு கால் மணிநேரத்திற்குள் எனது மகன் மயக்கமடைந்ததாக கூறி போலீஸார் ஆட்டோவை வரவழைத்து என் மகனை ஏற்றி மருத்துவமனைக்கு செல்லுமாறு அனுப்பிவைத்தார்கள். காவல்நிலையத்தின் வெளியே என் மகனை நான்கு போலீஸார் துாக்கி கொண்டு வந்து வண்டியில் ஏற்றிவிட்டார்கள். எனது மகனை சம்பவ இடத்தில் இருந்து அழைத்து சென்ற சார்பு ஆய்வாளர் பெயர் முகமது நூர்தீன் என்றால், எனக்கு தெரியாது. ஆனால் அவரை பார்த்தால் அடையாளம் தெரியும். எனது மூத்த மகன் நாகபாண்டி மதுரை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் சென்று புகார் கொடுத்தார் என்று செய்திதாளில் செய்தி வந்தது என்றால், அவ்வாறு நாங்கள் புகார் கொடுக்கவில்லை. என் மகன் அதிக குடிபோதையில் மேற்படி முகமது நூர்தீனை சட்டையை இழுத்துபிடித்து கிழித்துவிட்டார் என்றும் எனவே முகமது நூர்தீனும் மற்றும் இதர காவலர்கள் சேர்ந்து இறந்து போன அய்யனாரை அடித்த போது காயங்கள் ஏற்பட்டு இறந்து போனார் என்றால், எனக்கு தெரியாது. எனது மகனுக்கு படபடப்பு ஏற்பட்டது என்று எனக்கும், என்னுடைய உறவினர்கள் யாருக்கும் தெரியாது. நான் கண்ணனால் பார்த்தது இறந்து போன என் மகன், கணேசனை கன்னத்தில் அடித்து கீழே தள்ளிவிட்டான் என்றால்,

கையால் பிடித்து தள்ளிவிட்டான், கணேசன் கீழே இருந்த கம்பை பிடித்துக்கொண்டார். வேறு எதையும் நான் பார்க்கவில்லை என்றால், சரியல்ல, என் மகனை எதிரிகள் அடித்ததை பார்த்தேன். நான் அவ்வாறு என் மகனை எதிரிகள் அடித்ததை புகாரில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. நான் போலீஸ் கஸ்டடி மரணத்தை மறைப்பதற்காக நான் போலீஸிடமிருந்து கையூட்டு பெற்றுவிட்டு, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.16 18:50:18 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.